*1984 மார்ச் 10]*

சேலம்—பெங்களூர் இடையே தினசரி ஓடும் நவீன வசதிகள் கொண்ட தனியார் பேருந்துகள்.

255—(*வினா எண். 18556)—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலிருந்து பெங்களூருக்கு நவீன வசதிகள் உள்ள தனியார் பேருந்துகள் Daily Sight-Seeing என்று போட்டு ஓட்டுவதால் அரசு போக்குவரத்துத் துறைக்கு நஷ்டம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆகவே, அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் நவீன வசதியுடன் விரைவாகச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ''ஆல் இந்தியா பர்மிட்'' பெற்ற சில தனியார் பேருந்துகள் சேலத்திலிருந்து பெங்களூருக்கு Daily Sight Seeing என்று போட்டு ஓட்டுவதால் அரசு போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் பாதிக்கப்படுகிறது.

(ஆ) நவீன வசதிகளுடன் கூடிய பேருந்துகளைவிட அண்ணா போக்குவரத்துக் கழகம் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இம்மாதிரியான போக்குவரத்து விட்டுக் கொண்டிருக்கும்போது அரசு போக்குவரத்துக்கு முன்னும், அரசு போக்குவரத்துக்குப் பின்னும், சில தனியார் பஸ்கள் விடுகின்ற காரணத்தால், குறைந்தபட்சம் ½ மணி, ஒரு மணி நேர வித்தியாசத்தில் பஸ்களை விட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே இது ஆல் இந்தியா பர்மிட் என்ற காரணத்தால் அதில் நாம் தலையிட முடியவில்லை. இருந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன், சேலம், தருமபுரி மாவட்டங்களில் இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நேரத்தைக் குறைத்து ஓட்டுவதற்கு அவசியமில்லை என்றுதான் அவர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இருந்தாலும் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : இரவு நேரங்களிலே அதிகமாக போக்குவரத்து வசதி வேண்டியிருக்கின்ற காரணத்தால், பயணம் செய்கின்ற பயணிகள் அதிகமாக காத்திருக்கின்ற காரணத்தால், திருவள்ளுவர் பேருந்தில் நவீன வசதிகள் இருப்பது போல், எல்லா பேருந்துகளிலும் நவீன வசதிகளைச் செய்வதற்கு ஆவன செய்வாரா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அவைகள் குறுகிய தூரத்தில் ஓடுவதற்காக அந்தக் கழகத்தில் இருக்கிறது. நீண்ட தூரம் ஓடுவதற்காக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. இருந்தாலும் சில இடங்களில் முழுமையாக நவீன வசதிகள் இல்லை என்றாலும், ஓரளவிற்கு வசதிகளையுடைய பேருந்துகளை அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. அது நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றன.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆல் இந்தியா பர்மிட் என்று வாங்கிக் கொண்டு பலர் நேரத்தைப் போட்டுக்கொண்டு பேருந்துகளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால், அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் பெருத்த நஷ்டம் ஏற்படுவதால் பொதுமக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது. ஆகவே நேரத்தைப் போட்டு ஓட்டாமல், டெய்லி சைட் சீயிங் டிக்கட்டுகளை ஏற்றிச் செல்வதற்கு மட்டும் அனுமதி அளித்து, அதை மாற்றி அமைப்பதற்கு ஏற்பாடு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆல் இந்தியா பர்மிட் பொறுத்தவரையில், ஸ்டேஜ் கேரேஜ் ஆக அவர்கள் ஓட்டக் கூடாது. இருந்தாலும் அவர்கள் ஓட்டுகிறார்கள். நடவடிக்கை எடுக்கிறபோது, நாம் அவைகளை நிரூபிக்க முடியாத அளவிற்கு வாய்ப்பு வசதிகள் இல்லாமல் போகின்ற காரணத்தால், அந்த தவறு நடக்கிறது. எனவே அதற்கு வேறு மாற்று வழி கண்டு பிடிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சேலம், தருமபுரி மாவட்டங்களில் அதைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாட்டை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. சிவப்பிரகாசம் : தனியார் பேருந்துகள் பல நவீன வசதிகளுடன் இருப்பதால், அந்தப் பேருந்துகளுக்குக் கூட்டம் செல்கிறது. அண்ணா போக்குவரத்தில் 50, 60 பேருந்துகள் ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளில் நவீன வசதிகள் இல்லாத காரணத்தால் சில நேரங்களில் கூட்டம் இல்லாமல் இருக்கின்றன. அந்தப் பேருந்துகளை நவீன வசதிகளுடன் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நான் ஏற்கனவே சொன்னேன். அதற்கான பரிசீலனையில் இப்போது அண்ணா போக்குவரத்துக் கழகம் இருக்கிறது என்று. அந்தப் பேருந்துகள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்ற காரணத்தால், ஆண்டுக்கு ஒரு முறை புதிய பேருந்துகளாக மாற்றிக் கொண்டிருக்கிறோம், எனவே இப்படிப்பட்ட வசதிகளைச் செய்கின்றபோதுகூட. தனியார்கள் இன்னும் அதிகமாகச் செய்கின்ற காரணத்தால், சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதையும் ஈடுகட்டுகின்ற வகையிலே அண்ணா போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், பெங்களூர் போகும் வண்டிகளிலே தனியார்கள் வீடியோக்களை எல்லாம் வைத்திருக்கிறார்கள். எனவே அண்ணாப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளிலும் இந்த மாதிரியான வீடியோக்களை வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதற்கான ஒரு சட்டம் வந்திருக்கிறது. எனவே அந்தச் சட்டத்தின் மூலமாக அது கட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார்கள் பொருத்தும் திட்டம்.

256—(*வினா எண். 18842—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களிலும் மோட்டார்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம். இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் அதற்கான குறிப்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்போது ஏற்கனவே பல ரிக்ஷாக்களில் மோட்டார்கள் பொருத்தப்பட்டு அவைகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அப்படி ஓடுகின்றபோது அதிலே இரண்டு பேர்கள் உட்கார்ந்து வேகமாகப் போகும்